**பிரதேச அபிவிருத்தி வங்கி - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பிரதேச அபிவிருத்தி வங்கியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன், அல்லது

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து மோசடிகளால் கூட்டிணைவால், இடம்பெறுகின்ற போலி தாக்கங்கள் ஆவணங்களைத் இடம்பெறுகின்ற பாரியதாக தாக்கங்களை இருப்பதானது தயாரிப்பதனால், விட தவறான வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின்

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக முகவராண்மை தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் கணக்கீட்டிற்காக சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகவராண்மை தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும்

நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

#### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளக கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 1. | வங்கியினுடைய கடன் வகைப்படுத்தல் மற்றும் தள்ளுபடி முறைமை உயர்ந்த மட்ட கைமுறைச் சீராக்கலை ஈடுபடுத்தியருந்தது என அவதானிக்கப்பட்டது. இந்த நடைமுறை கடன் வகைப்படுத்தலில் சீரற்ற மற்றும் உள்ளக வகைப்படுத்தல் ஆபத்தீ அதிகரிக்கும் மற்றும் ஏதிர்பார்க்கப்பட்ட கடன் நட்டங்கள் (ECL) குறைத்து மதிப்பிடுவதற்கு வழிவகுக்கும். | முறைமை வரையறைகள் காரணமாகவும் உயர் மட்ட பாரமரிப்பை பேணும் நோக்கிலும் நாங்கள் நமபகத் தன்மையான விளைவுகளை உறுதிப்படுத்தவதற்கு தேவையான கைமுறைச் சீராக்கலை செய்கின்றொம் | கைமுறைச் சீராக்கல் மீதான நம்பிக்கையை குறைப்பதற்கு கடன் வகைப்படுத்தல் மற்றும் கடன் தள்ளுபடி நடைமுறை என்பவற்றினை சாத்தியமான அளவிற்கு தானியங்கப்படுத்தல் |
| 2. | வங்கியானது பிரதான வங்கி முறைமைக்குள் (CBS) மீள்நிதியல்லாக கடன் வசதியாக தவறாக வகைப்படுத்தப் பட்டிருந்தது. இந்த தவறான வகைப்படுத்தல் முறைமை வரையறைகள் காரணமாக ஏற்பட்டிருந்தது. அரம்பத்தில் பதிவு செய்யப்பட்டவுடன் தயாரிப்பு வகைப்படுத்தலை திருத்தம் திறனை கட்டுப்படுத்தும். ஆகவே, மீள்நிதியல்லாக கடன் வசதியாக கடன் வசதிகளாக தவறாக வகைப்படுத்தப்பட்டிருந்த | முறைமை வரையறைகள் காரணமாக ஊடீளு களிறகுள் வகைப்படுத்தலின் மாற்றத்தில் சில மீள்நிதியல்லா கடன் வசதிள் நிதியளிப்பு கடனாக தவறாக வகைப்படுத்தப்பட்டது. எதிர்பார்க்கப்படும் கடன் நட்டத்தை குறைத்து மதிப்பிடுவதற்கு வழிவகுக்கும். இதனை குறைப்பதற்கு கைமுறை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்ததுடன் அத்தகைய | வகைப்படுத்தலின் சரியான தன்மையை அனுமதிப்பதற்கும் எதிர்காலத்தின் கடன் வசதிகளின் தவறான வகைப்படுத்தலை தடுப்பதற்கும் முறைமை செயற்பாட்ட தரமுயர்த்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வங்கியினுடைய உரிமையாளர் நிதிகளை பயன்படுத்தி கைதவிர்க்கப்பட்டிருந்தது. ஆகவே, இந்த தவறான வகைப்படுத்தல் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டத்தை குறைத்து மதிப்பிடுவதற்கு வழிவகுக்கும் என மேலும் அவதானக்கப்பட்டுது. | கடன் வசதி குறைபாடுகளை சரிசெய்யும். | |

### 1.5.2. இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களிற்கான குறிப்பகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (LKAS 16) 51 ஆம் பந்தியின் பிரகாரம் ''சொத்தின் ஆயுள் காலத்தை மீள மதிப்பிடுவதற்கு குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டிலும் மதிப்பீடு செய்யப்படும் முன்னைய ஆண்டு மதிப்பீடுகளுடன் ஒப்பிடும் பொது வேறுபடும் LKAS 8 இன் பிரகாரம் மாற்றங்கள் கணக்கீடு செய்யப்படும்''. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு வரையும் இன்னமும் பாவணையிலுள்ள ரூபா 2,517,809,777 தொகையான முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் ஆயுள் காலம் மீளாய்வு செய்யப்பட்டு இதன்படி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளை பின்பற்றவதற்கு செய்யப்பட்டிருந்தது. | உரிய கணக்கீட்டு நயமம் பின்பற்றப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| வங்கியானது பொருளாதார காரணி (EFA) காரணி சரிசெய்தல் சரிசெய்யும் பொது தேவையான அடுத்தடுத்த மாற்றங்ள் செய்யப்படும் போது வித்தியாசமான உற்பத்திகளின் தரமான காரணகளிற்கு சரியான புள்ளிகளை ஒதுக்கியிருக்கவில்லை. சகல தரமான காரணிகளிற்கும் புள்ளிகள் வழங்கப்படுகின்றது மேலும் இது சகல கடன் வசதிகளிற்கும் ஏற்புடையதாக இருக்கும். மேலும் ஆண்டிற்கு அண்டு மாற்றப்பட்டிருக்காதுடன் EFA இற்கான தாக்கம் சிறந்த வெளிப்பாட்டிற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை | வங்கியானது வேண்டுகை பிரகாரம் நுகுயு இற்கு அவசியமான திருத்தங்களிற்கு உதவுவதற்காக வங்கி மதிப்பீட்டு ஆலோசகரை ஈடுபடுத்தியிருந்தது. அந்த திருத்தங்கள் 2025 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறான கணிப்பீட்டில் அமுலாக்கப்படும். | EFA ஐ முறையாக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவெண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 செலுத்த வேண்டியவை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 1. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் நிலுவையாக இருக்கின்ற வரி மதிப்பீட்டின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரி மற்றும் தண்டப்பண கொடுப்பனவு ரூபா 6 பில்லியன் மேலதிகமாக உள்ளது. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிர்ணயிப்பகளின் அடிப்படையில் YA17/18 மற்றும் YA19/20 தொடர்பில் நிறுவன வருமான வரிகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வருமான வரியின் கீழ் ரூபா 212,281,393 மேலதிக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் செய்யப்பட்ட சரியான தொகையை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 2. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 ஆம் அண்டிற்காக வருடாந்த இலாப மிகையூதிய கொடுப்பனவிற்காக வழங்கப்பட்டிருந்த 225100140 வருடாந்த செயற்பாட்டு இலாபத்தின் - GL அடிப்படையில் செலுத்த வேண்டிய மிகையூதியத்தில் ரூபா 174,418,972 தொகையான செலுத்த வெண்டிய மீதி முற்கொண்டு வரப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. மிகையூதிய கொடுப்பனவு அனுமதித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | முகாதைத்துவ தீர்மானங்களிற்கு உட்பட்டு GL 225100140 இருக்கின்ற ஏற்பாட்டு தொகைகளை தெளிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபையால் அனுமதிக்கப் பட்டிருக்காமை காரணமாக ஊழியர்களிறகான மிகையூதியம் செலுத்துவதற்கு எவ்வித பொறுப்பும் இருக்கவில்லை. செலுத்த வேண்டிய மீதியை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 முற்பணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 1. | 06 முற்பண கொடுப்பனவு தொடர்பில் ரூபா 9,187,768 ஆன தொகை தெளிவாக்காமல் ஒரு அண்டிற்கு மேலாக கணக்குகளில் இருந்தது. இந்த விடயம் 2018 இலிருந்து கணக்காய்வு ஐயவினாவில் மூலம் தொடச்சியாக அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அந்த மீதி மாற்றமடையாது இருந்தது. | ஒரு கொள்வனவு பூர்த்தியாக்கப்பட்டதுடன் முற்பணக் கொடுப்பனவு சொததுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. ஏனையவை செயற்பாட்டில் இருந்தது. | உரிய கொள்வனவு பூர்த்தியாக்குவதற்கும் நீண்டகாலம் நிலுவையாக இருக்கின்ற முற்பண கொடுபபனவு மீதி தெளிவாக்கவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 2. | ஆபத்து தன்மையை குறைக்கும் நோக்கில் கடன்கள் மற்றும் முற்பணங்கள் வழ்கும் போது போதிய பிணைமுறிகள் பெறப்பட வெண்டுமென வேண்டப்பட்டது. 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான கடன் கோவை பிரகாரம் | முகாமைததுவ கருத்துரை பெறப்படவில்லை. | கடன்கள் மற்றும் முற்பணங்களை பாதுகாப்பதற்கு போதிய மற்றும் முறையான பிணைமுறிகள் பெறப்பட்டிருநததனை |

| | | |
|---|---|---|
| வங்கியின் மொத்த கடன் தொகை ரூபா 183,670,036,607 பதிவு செய்திருந்தது. அதில் ரூபா 1,485,985,522 தொகையான கடன் நிலுவை 25 செயறபாடற்ற உறுப்பினர்களிற்கு சொந்தமானது மேலும் மொத்த நிலுவைாக இருக்கின்ற கடன் மீதியில் 25 செயற்பாடற்ற வாடிக்கையாளர் தொடர்பில் நிலுவையாக இருக்கின்ற கடன் மீதி ரூபா 655,653,042 அல்லது 44 சதவீதம் அசையாத ஆதனங்களிற்கு எதிராக பிணைவைக்கப்பட்டிருக்கவில்லை. கிடைத்த பிணைமுறிகள் போதாமையால் இந்த தொகையின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாக உள்ளது. | | உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 1 <u>வங்கியியல் அதிகாரசட்ட நெறிப்படுததல்கள்</u><br>i. 2011 ஒக்தோபர் 05 ஆந்திகதிய 2011 இன 7 ஆம் இலக்கம் | | | |
| (அ) வழிகாட்டல் பீ இன் 1.2(எ) ஆம் நெறிப்படுத்தல் | கடன் ஆபத்து கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஒவ்வொரு கடன்பெறுவோர் மற்றும் வசதி ஆபத்து வீதமிடுகின்ற ஒதுக்கப்பட வேண்டிய கொண்டுள்ளது. எவ்வாறாயினும் வங்கி ஒவ்வொரு கடன்பெறுவோர் மற்றும் கடன் வசதிக்கும் ஆபத்து வீதம் ஒதுக்க வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. தற்போது ஆபத்து வீதங்கள் அசையாத ஆதனங்கள் மூலம் பிணை வைக்கப்பட்ட ரூபா 5 மில்லியனை விஞ:சியிருந்த கடன் வசதிகளுடனான வாடிக்கையாருக்கு மாத்திரம் ஒதுக்க்பபட்டது | சபை ஒருங்கிணைந்த ஆபத்து முகாமைத்துவ குழுவின் பரிந்துரைகள் (BIRMC) மீது பணிப்பானர் சபைக்கு தாள் சமர்ப்பிக்கப்பட்டது.எவ்வாறாயனும் இந்த விடயம் 2025 திசெம்பர் 31 அளவில் கடன் தொடக்க முறைமையின் முழுமையான அமுலாக்கலுடன் திருத்தப்படும். | சகல கடன் பெறுவோர் மற்றும் கடன் வசதிகளும் கடன் ஆபத்து கொள்கை மற்றும் நடைமுறைகளுடன் ஆபத்து வீதமிடல் ஒப்படைக்கப்பட்டதென உறுதிப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் தனிப்பட்ட பிணைமுறிகள் அல்லது ஏனைய ஏட்டுக்கள் மூலம் பிணை வகைக்கப்பட்டிருந்த ரூபா 3.50 மில்லியன் வசதிகள் ஒதுக்கப்பட்டது. | | |
| | (ஆ) வழிகாட்டல் B இன் 2.5(ஆ) நெறிப்படுத்தல் | வங்கியானது பல்வேறு தொழில்கள், வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்ட துறைகளில் கடன் பெறுவொர்களின் வீதமிடல் - வாரியாக மதிப்பிடுவதற்கு கருத்திற் கொள்ளப்பட வேண்டும். வங்கியானது தொழில்கள், வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்ட துறைகளில் கடன் பெறுவொர்களின் வீதமிடல் - வாரியாக மதிப்பிடுவதற்கு பொறிமுறை தாபிக்கப் பட்டிருக்கவில்லை. இது சரிபார்க்கப்படாத போட்போலியோ அளவுகள் தவறான ஆபத்து மதிப்பீடுகள் மற்றும் பயனற்ற கடன் மதிப்பீட்டு நடைமுறைகள் விளைந்தது. | கடன் பெறுவோர் வீதமில் ஏற்கனவே டுழுளு இல் உள்ளடக்கப்பட்டது. எனவே, இந்த விடயம் 2025 திசெம்பர் 31 அளவில் கடன் தொடக்க முறைமையின் முழுமையான அமுலாக்கலுடன் திருத்தப்படும. | சகல கடன் வீதமிடலும் முறையாக பதியப்பட்டதை உறுதப்படுத்தவதற்கு கடன் தொடக்க முறைமை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii | 2014 யூன் 26 ஆந் திகதிய 2024 இன 14 ஆம் இலக்கம் | | | |
| | (அ) தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ வழிகாட்டல் -II இற்கான அடிப்படை நியமத்தின் நெறிப்படுத்தல் - 4.2 | வழிகாட்டல் தேவை மற்றும் முன்னுரிமை மற்றுும் எதரிபார்க்கம் பாதுகாப்பு அளவை குறிக்கும் தகவலை வகைபபடுததும் சொத்து உரிமையாளரிற்கு ஆதரவளிக்கும் நோக்கில் வங்கியின் தகவல் வகைபடுத்தல் தகவல் பாதுகாப்பு கொள்கை வழிகாட்டலில் வெளிப்படுத்தப்படும். தகவல்களை வெளியிடுவதற்கான நடைமுறைகள் தாபிக்ப்பட்டு செயல்படுத்தப்படும் | தகவல் பாதுகாப்பு கொள்கை ISO 27000:2022 நியமத்துடகன் இணைந்து மீளாய்வு செய்யப்பட்டிரந்தது. தகவல் வகைப்படுத்தல் கொள்கை தயாரிக்கப்பட்டு BIRMC இற்கு பின்னர் பணிப்பாளர் சபைக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்து இந்த ஒப்படை 2025 நவம்பர் 30 அளவில் பூர்த்தியாக்குவதற்கு | நெறிபபடுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறாயினும் வங்கியானதுதரவு மற்றும் அவர்களுடைய இரகசி மட்ட அடிபபடை தகவல் வகைப்படுத்தவதற்கு விரிவான வங்கி-வாரியான தகவல் வகைப்படுத்தல் பொறிமுறை தாபிக்கப் பட்டிருக்கவில்லை. வங்கி தகவல் வகைப்படுத்தலிற்காக வேண்டப்பட்ட தகவல் பாதுகாப்பு கொள்கை இடப்பட்டிருந்ததுடன் மின்னியல் ரீதியாக பேணப்பட்ட கோவை ∴ ஆவணங்கள் அடைடவணை யிடப்படாமையால் வினைத்தறனாக அமுலாக்கப் பட்டிருக்கவில்லை. | பட்டியலிடப்பட்டது. | |
| (ஆ) தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ வழிகாட்டல் -II இற்கான அடிப்படை நியமத்தின் நெறிப்படுத்தல் - 6.15 | நிர்வாக, செயற்பாடு மீளாய்வு செய்வத்கு முறைமைகள் கண்காணிக்கப்பட வேண்டும் மேலும் தவறான பதிகள் மற்றும் பாதுகாப்பு நிகழ்வுகள் பதிவு செய்யப்பட வேண்டும். தகவல் முறைமை சிக்கலகள் இனங்கண்டு தீர்வு காணப்படுவதை உறுதி செய்ய இந்த பதிவுகள் பயன்படுத்தப்பட வேண்டும். சாத்தியமான பாதகாப்பு சிக்கலை இனங்கண்டு கணனி பதிவுகளை மீளாய்வு செய்வதற்கு வங்கியிடம் பயனுள்ள நடைமுறை இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. பதிவு மீளாய்வு முறைமை இன்மையால் அதன் IT சூழல் முழுவதும் அசாதரண அல்லது அனுமதிக்கப்படாத செயற்பாடுகளை முறையாக | வெளித்தரப்பிர் சேவையாக செயற்படுத்தப்பட வேண்டிய முழுமையான கண்காணிப்புககாக 24 மணித்தியால பாதுகாப்பு முறைமை செயற்பாட்டிற்காக (SOC) கொள்வனவு நடைமுறை தற்பொது செயற்பாட்டில் உள்ளது. இந்த வசதயின் அமுலாக்கல் 2025 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்டது. | நெறிபபடுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கண்காணிக்கவும் கண்டுபிடிக்கவும் வங்கியின் திறன் கணிசமாக கட்டுப்படுத்தப்படுகின்றது | | |
| | (இ) தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ வழிகாட்டல் -II இற்கான அடிப்படை நியமத்தின் நெறிப்படுத்தல் - 13.10 | தகவல்கள் கசிவதற்கான சாத்தியங்கள் எல்லா நேரங்களிலும் தடுக்கப்பட வேண்டும். முக்கியமான மற்றும் இரகசிய தகவல்கள் பகிர்வதை அல்லது பரப்புவதை தடுப்பதற்கு தேவையன தகவல் கசிவு கட்டப்பாட்டு பாதுகாப்பு முறைமை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. . | தகவல் வகைப்படுத்தல் கொள்கை தயாரிக்கப் பட்டிருந்ததுன் BIRMC இன் அனுமதி நிலுவையில் உள்ளதுடன் சபை 2025 நவம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கவதற்கு பட்டியலிடப்பட்டது. | தகவல் கசிவுப் பாதுகாபபதற்கு தகவல் கசிவு பாதுகாப்பு முறைமை அமுலாக்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iii | 2021 யூன் 16 ஆந்திகதிய 2021 இன் 09 ஆம் இலக்கம் நெறிப்படுத்தல் 8.2 | ரூபா 1 திரிலியனிற்கும் குறைவான சொத்துக்களுடைய அனுமதியளிக்கப்பட்ட வ்கிகள் 2022 யூன் 30 இலிருந்து அறவீட்டுத் திடடத்தை பெனுப்பட வெண்டியதுடன் அத்தகைய திட்டங்கள் உரிய வங்கியின் நியதி பிரீட்சிப் போது மீளாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும்வங்கியானது வேண்டப்பட்டவாறு அறவீட்டு திட்டதடதை தயாரிப்பதற்கு தவறியிரந்ததுடன் நியதி பரீடசிப்பின் போது மீளாய்விற்கு திட்டத்தை சமர்ப்பிக்க இயலாதிரந்தது. அனுமதிக்கப்பட்ட மற்றும் மேமபடுத்தப்பட்ட அறவீட்டு திட்டம் இன்மை தாமதப்பட்ட அறவீட்டு நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளில் | வங்கியினுடைய இருக்கின்ற அறவீட்டுத் திட்டம் தற்போது அனுமதிக்கப்பட்ட விரிவாக்கல் திட்டத்துடன் இணைந்து மேம்படுத்தப்படகின்றன மேம்படுத்தபபட்ட அறவீட்டுத் திட்டம் சபை அனுமதித்த பின்னர் அவர்களுடைய பரிந்துரைகளுடன் அடுத்த ஒருங்கிணைந்த ஆபத்து முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும். | அனுமதிக்கப்பட்ட விரிவாக்கல் திட்டத்துடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கு தரமுயர்த்தப்பட்ட அறவீட்டு திட்டம் இறுதியாக்குவதற்கு நடவக்கை எடுககப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சாத்தியமான உறுதியற்ற தன்மைமையின் ஆபத்ததை அதிகரிக்கும். | | |
| iv | 2021 செப்தெம்பர் 14 ஆந் திகதிய 2021 இன் 13 ஆம் இலக்கம் | | | |
| | (அ) நெறிப்படுத்தல் 4.2.5 | அனுமதிக்கப்பட்ட வங்கியின் கடன் வசதிகளை வகைப்படுத்துதல் அங்கீகரித்தல் மற்றும் அளவீடு செய்தல் என்பவற்றிற்கு பயன்படுத்தப்படும் மாதிரிகள் தொடர்பில் விரிவான மெய்மையாய்வு கொள்கையில் கடன் கொள்கை உள்ளடக்கியிருப்பதை பணிப்பாளர் சபைஉறுதிப்படுத்தும் அதில்தெளிவான பணிகள் மற்றும் பொறுப்பகள் மெய்மையாய்வு மற்றும் வங்கியால் பயனடபடுத்தப்படும். நடைமுறைகள் மற்றும் வழிமுறைகள் அடங்கும். எவ்வாறாயினும் வங்கியானது மேற்குறித்த கொள்கையை தாபிப்தற்கு தவறியிருத்தமை அவதானிக்கப்பட்டது. | கடன் வசதகளின் வகைப்படுத்தல் அங்கீகாரம் மற்றும் அளவீட்டில் பயன்படுத்தப்படும் மதிரிகளிற்கான மீளாய்வு கொள்கைளை உள்ளடக்கிய கடன் கொள்கை பணிப்பாளர் சபையால் 2025 யூன் 5 இல் அனுமதிக்கப்பட்டது. மேலும் அத்திகதிய் இருந்து செயற்பாட்டில் உள்ளது. | வினைத்திறனான கடன் மகாமைத்துவ ஆபத்தை பேணுவதற்கு சபை அனுமதித்த கடன் கொள்கையை உரிய கால அமுலாக்கல் மற்றும் தொடர்ச்சியான மீளாய்வை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| | (ஆ) நெறிப்படுத்தல் 4.4 | அனுமதிபெற்ற வீசெட வங்கிகள் அதே வங்கியால் எந்தவொரு கடன் பெறுவோருக்கம் வழங்கப்பட்ட எந்தவொரு கடன் வசதியை மீட்பதற்கு நிதியளிக்ககூடாது. எவ்வாறாயனும் புதிய கடன் வழங்குவதன் மூலம் கடன்களை அறவிடுவதற்கு வங்கி நிதியளிக்கப்பட்டுள்ளது | அத்தகய கொடுக்கல் வாங்கலை தவிர்ப்பதற்கு உரிய கிளைகளிற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | பிரமாணங்களுடன் இணங்குதல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்தல் உறுதிப்படுத்துவதற்கு நடவடிககை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என அவதானிக்கப்பட்டது. .உதா அவிசாவளை மற்றும் மவறமண்டிறிய கிளைகள். | | |
| (இ) நெறிப்படுத்தல் 10.1.2 மற்றும் 10.1.3 | மேம்படுத்தப்பட்ட கடன் வசதிகளை தவிர இரண்டு மடங்கு மறுசீரமைக்கப்பட்ட கடன் வசதிகள் வசதிகள் மட்டம் 2 ஆகவும் மேம்படுத்தப்பபட்ட கடன் வசதிகளை தவிர இரண்டு மடங்கிற்கு மேல் மறுசீரமைக்கப்பட்ட கடன் வசதிகள் SLFRS 9 இன் கீழ் மட்டம் 3 ஆகவும் வகைப்படுத்தப்படும். எவ்வாறாயினும், கடன வசதிகள் எத்தனை முறை மறு சீரமைக்கப்பட்டன என வெளிப்படையாக அடையாளம் காணப்பட வங்கி வழிமுறையை தாபிக்க்பபட்டிருக்கவில்லை எனவும் அவற்றினை அதற்கேற்ப வகைப்படுத்த தவறிவிட்டதெனவும் அவதானிக்கப்பட்டது. தவறான நிலைப்படுத்தல் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்களை (ஊடுள) குறைவாக மதிப்பிடுவதற்கு வழிவகுக்கும் என்று மேலும் அவதானிக்க்பபட்டது. | பிரதான வங்கியியல் முறைமை தற்பொது ஒரு வழிமுறை இல்லாதால் தகவல் இப்பொது கைமுறையாக சேகரிக்கப்பட்டு மாதாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது இது 2025 செப்தெம்பர் அளவில் கடன் தள்ளுபடி கணிப்பீடுகள் முழுமையாக திருத்தப்படும். | எதிர்பார்க்கப்படும் கடன் நட்டங்கள் துல்லியமான மமதிபீடு மற்றும் சரியான கணக்கீட்டை உறுதிசெய்வதற்கு கடன் வசதி மறுசீரமைப்புக்களை கண்காணிக்க சரியான வழிமுறையை தாபிக்கப்பட வேண்டும். |
| (ஈ) நெறிப்படுத்தல் 11.1.1 | கடன் வசதகளை மேம்படுத்தவது பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்ட கொள்கையின் பரகாரம் இருக்க வெண்டும்.மேலும் அதடதகைய மேமபடுத்தலுக்கான காரணம் முறையாக ஆவணப்படுத்தப்பட | சபை அங்கீகரித்த மேம்படுத்திய ஆபதது முகாமைத்துவ கொள்கையின் பிரகாரம் ஆபத்து முகாதைத்துவ முறை மீள் திட்டமிட கடன்களை மேம்படுத்துகின்ற எதிர்கால கடன் சுமைகளை | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டும். அத்தகைய கொள்கை வாடிக்கையாளரின் எதிர்கால கடன் சுமைகளை எதிர்பாரக்க கூடிய எதிர்கால செலுத்தும் திறனில் வங்கி திருப்தி அடைவதை உறுதி செய்யும். எவ்வாறாயினும் மேற்குறிப்பிட்ட வேண்டுகையுடன் இணங்குவதை மீளாய்வு செய்வதை போதுமான ஆதாரங்கள் இல்லாமல் வங்கி கடன் வசதிகளை மேம்படுத்தியுள்ளது. அவதானிக்கப்பட்டது | வாடிக்கையாளருக்கு செலுத்தும் திறனாக வெளவாரி ஆதாரங்களை கருததிற் கொள்ளவில்லை இந்த இடைவெளியை சரி செய்வதற்கு வங்கி அதன் எதிர்காலம் வரை செலுத்தும திறனில் கொள்கையை மீளாய்வு செய்து வருகின்றது | |
| v | 2021 திசெம்பர் 09 ஆந் திகதிய 2021 இன் 16 ஆம் இலக்கம் | | | |
| | (அ) நெறிப்படுத்தல் 4.1.2 | அனுமதியளிக்கப்பட்ட வங்கியின் பணிப்பளர் சபை நிறைவெற்ற அதிகாரி இல்லாத நிலையில் தகவல் பாதுகாப்பு குழு (ISC) கூட்ங்களிற்கு தலைமை தாங்கஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட துணைத் தலைவர்களை நியமிக்கும். எவ்வாறாயினும், பிராந்தி அபிவிரத்தி வ்கியின் பணிபாளர் சபை ஐளுஊ இற்கு துணைத்தலைவரை நியமிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |
| | (ஆ) நெறிப்படுத்தல் 4.1.6 | தகவல் பாதுகாப்பு குழு (ISC) சபையின் ஒருங்கிணைந்த ஆபத்து முகாமைத்துவ குழு பணிப்பாளர் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் மற்றும் குறைந்தது காலாண்டு அடிப்படையில் அதன் நடவடிக்கைகள் குறித்து | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | BIRMC இன் காலாண்டு அறிக்கைகளை சமர்ப்பித்தை ISC உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | BIRMC இற்கு தெரிவிக்கும். எவ்வாறாயினும் வங்கியின் காலாண்டு அறிக்கைகளை BIRMC இற்கு சமர்ப்பிக்கவில் லை. என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) நெறிப்படுத்தல் 4.1.7 | தகவல் பாதுகாபடபு குழு (ISC) இரண்டு மாதங்களிற்கு ஒரு தடவையாவது கூட வேணடும் எவ்வாறாயனும் வங்கியானது இந்த வேண்டுகையை நிறை வேற்றியிருக்வில்லை என அவதானிக்கபடபட்டது 2024 திசெம்பர் 31 இல முடிவடைநத ஆண்டிற்காக குறைந்தது 06 கூட்டங்கள் நடைபெற வேண்டிய போதிலும் 03 ISC கூட்டங்கள் மாத்திரம் நடைபெற்றிருந்தது. இது சரயான நேரத்தில் சநிவர்த்தி செய்யும் குழுவின் வினைத் திறனைப் பதாதிக்கலாாம். | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. ஆண்டில் | தகவல் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் நினைத்திறனை பேணுவதற்கு குறைந்தது ஒவவொரு இரண்டு மாதங்களிற்கு ஒருதடவை ISC கூட்டுவதறகு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) நெறிப்படுததல் 4.2.1 மற்றும் 4.2.2 | அனுமதிபெற்ற வங்கிகள் பிரதம தகவல் பாதுகாபபுகடக பொறுபபாக பாதுகாப்பு உத்தயோகத்தரை நியமிப்பதற்கு (CISO) அதிகாரமுளடளது. வங்கியினுடைய தகவல் பாதுகாப்புக்கு பொறுபபான வங்கியின் சிரேஸ்ர முகாமையாளர் குழு CSIO உள்ளது. அனுமதியளிக்கபபட்ட வங்கிகளில் பிரதம நிறைவேறறு . உத்தியோகத்தர் மட்டததிற்கு கீழே உடனடி இரண்டு | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நிறுவன தகவல் பாதுகாப்பு முறைமையை வலுப்படுததுவதற் கு வேண்டப்பட்ட சிரேஸ்ட முகாமைததவ மட்டத்தில் தகுதியுடைய CISO ஐ நியமிப்பதற்குந நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடுக்கிற்குள் இருப்பார். எவடவாறாயினுமட வங்கியானது வேண்டுகைக்கு ஏற்ப CISO அதிகாரி நியமிக்கப்பட்டிருககவில லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) நெறிப்படுததல் 4.6.5 | அனுமதியளக்கபபட்ட வங்கிகள் தொழில்நுட்ப சார்ந்த தயாரிப்புகள் மற்றுமும் சேவைகக்டண அட்டைகள்மெற்றும் மின்னியல் வங்கிகித் தகவல்கள் பாதுகாபபு தொடர்பில் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தொடர்பான சேவையை வழ்குதல் போனற செயறபாடுகளற்கு பொறுப்பாக வியாபார பரிவு ஆபத்து முகாமைத்துவ செயற்பாட்டால் கண்காணிக்கப்படும். காலாண்டு ஆபத்து மறறும் கட்டுபடபாட்டு சுயமதிப்பீடு (சுஊளுயு) நடைமுறைக்கு உட்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும். எவ்வாறாயினும வங்கி இந்த வேண்டுகையை அமுலாக்கியிருக் கவில்லை என அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | முறையான ஆபதடது கண்காணிப்பு மற்றும் இணங்குதலை உறுதி செய்வதற்கு ஆபத்து மற்றும் சுய கட்டுப்பாட்டு மதிப்பீட்டு முறையை அமுலாக்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) நெறிப்படுத்தல் 4.6.6 | அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் மூன்றாம் தரப்ப செவை வழங்குநர் மற்றும் முகவர்களிற்காக ஆபத்து மற்றும் கட்டுப்பாடு சுய-மதிப்பீட்டு செயற்பாடுகள் உள்ளடங்கலாக போதுமான தொழில் நுட்ப ஆபத்து முகமைத்துவம் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை செயற்படுத்த வெண்டும் | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவை அனுமதிபெற்ற வங்கியின் BIRMC ஆல் அனுமதிக்கப்பட மூன்றாம் தரப்ப செவை வழங்குநர்கள் மற்றும் முகவர்கள் மேற்கொள்ள வேண்டிய சேவைகளின் முக்கியத்துவம் மற்றும் உணரவுகளுமன் ஒத்துப் போகிறன. எவ்வாறாயினும் வங்கியானது ஆல் அனுமதிக்பபபட்டஅஆபத து மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீட்டு யெற்பாடுகளை அல்லது அதன் மூன்றாம் தரப்ப செவை வழங்குநர்கள் மற்றும் முகவர்களிற்கு (ஏதாவது இருப்பிக்) போதுமான கண்காணிப்பு வழிமுறைகளை வங்கி செயற்படுத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இந்த இணக்கமிமை வெளித்தரப்பினரால் செய்யப்பட்ட செயறபாடுகள மீதான போதுமான மேற்பார்வையில் ஆபத்தை அதிகரிக்கின்றது இது வங்கி செற்பாட்டை இணக்கம் மற்றும் தகவல் பாதுகாப்பு ஆபத்துக்களிற்கு உள்ளாக்ககூம் என அவதானிக்கப்பட்டது. | | |
| (எ) நெறிப்படுத்தல் 4.7.1 | அனமதியளிக்கப்பட்ட வங்கிகள் இநத ஒழுங்குமுறை கட்டமைப்பிலும் தகவல் பாதுகாபபு மற்றும் தொழில்நுட்ப ஆபத்து முகாமைத்துவம் தொர்பான ஏனை மத்திய வங்கியின் விதிமுறைகளிலுமுள்ள வெண்டுகைக்கு இணங்குவதை உறிதசெய்ய வேண்டும் | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | இலங்கை மத்திய வங்கி பிரமாணங்களுடன் இணங்குவை மெய்மையாய்வு செய்வதற்கு உள்ளக கணக்காய்வு பிரிவு நடாத்தகின்ற வருடாந்த மதிப்பீடுகளை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறாயினும் வங்கியானது உள்ளக கணக்காய்வு பிரிவு குறைந்தது ஆண்டு தோறும் அத்தகைய இணக்கத்தை சரிபார்க்கப்பட வெண்டும். எவ்வாறாயினும் வங்கியானது குறித்த விதிமுறைகளிற்கு இணங்குவது தொடர்பான வங்கியின் உள்ளக கணக்காய்வு பிரிவு அத்தகைய அத்தகைய மீளாயவை மேற்கொண்டதாக கணக்காய்வின் போது நிரூபிக்கப்படவில்லை. | | |
| (ஏ) நெறிப்படுத்தல் 5.1.1 | அனுமதியளிக்கப்படட வங்கிகளின் பணிபபாளர் சபைக்கு தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஆப்தது முகாமைத்துவம் குறித்து விரிவான வருடாநத பயிற்சி மற்றும் வழிப்புணர்வு திட்டதை செயற்படுத்த வேண்டும். அத்தகைய பயிற்சி திட்த்தை ஒவ்வொரு ஆண்டிலும் தகவல் பாதுகாப்பு குறைந்தது ஒரு வருடம் திட்மிடப்பட்ட பயிற்சி திட்டத்தை ஒவ்வொரு ஆண்டிலும் தகவல் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப ஆபத்து முகாமைத்துவ நிபுணர்களால் ஒன்று அல்லது அதற்கு மெற்பட்ட விழப்பணர்வு நிகழச்சிகளை கொண்டிருக்க வெண்டும் எவவாறாயினும் வங்கி அதன் பணிப்பாளர் சபைக்கு பயறிசி அல்லது வழிப்பணர்வு திடத்தை நடாத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | வேண்டப்பட்டவாறு பணிப்பாளர் சபைக்காக தகவல் பாதுகாபபு மறறும் தொழில்நுட்ப ஆபத்து முகாமைத்துவம் மீது கட்டமைக்கப்பட்ட வருடாந்த பயிற்சி மற்றும் விழப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) நெறிப்படுத்தல் 5.1.2 | அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் அனுமதியளிக்கப்பட்ட வங்கி ஊழியர்கள் முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர் முக்கியமான தகவல் முறைமைகள் வாடிக்கையாளர் தரவு அல்லது இரகசிய வாடிக்கையாளர் அல்லாத தரவுகளிற்கு ஆளாக நெரிடும். அல்லது வெளிப்டுத்தக் கூடியவர்கள் தகவல் பாதுகாப்பு குறித்து சான்றிதழ் பெற்றிருப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் முகர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்கள் போதுமான மற்றும் ஒப்பிடக் கூடிய தகவல் பாதுகாப்பு விழிப்பணர்வு நடவடிக்கைகள் செயற்படுத்தப் பட்டிருந்தால் பணிப்பாளர் சபை முகவர்கள் மறறும் மூன்றாம் தரப்பு செவை வழங்குநர்களின் ஊழியர்களின் தேவைகளிலிருந்து விலகளாம். எவ்வாறாயினும், வங்கி அதன் அனைத்து ஊழியர்களின் தேவையான பயிற்சி மற்றும் சான்றிதழை வழங்கவில்லை எனபதும் முகவர்கள் மற்றும் மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்கள் பொதுமான தகவல் பாதுகாப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகளை செயற்படுத்தி யுள்ளார்களா என்பதை மெய்மையாய்வு செய்யவிலலை என்பது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |

| | | | |
|---|---|---|---|
| (ஒ) நெறிப்படுததல் 5.2.2 | அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் சலகை பெற்ற பயன்பாட்டாளர் உட்பட சகல பயன்பாட்டாளர்களையும் நிர்வகிக்க தொழில்துறை பயன்பாட்டாளர் அனுகுதல் மற்றும் அடையான முகாமைத்துவ முறைமை(கள்) செயற்படுதத வேண்டும். எவ்வாறாயினும் வங்கியானது அத்தகைய முறைமையை அமுலாக்கி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் இது அனுமதக்கப்டாத நுழைவு சலுகை பெற்ற கணககுகளின் சாதடதயமான தவறான பயன்பாடு மற்றும் பிரதாக தகவல் முறைமை மீதாக போதிய கட்டுப்பாடு அல்லாத ஆபத்துக்களிற்கு வங்கியை உருவாக்ககூடும். | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை | பயன்பாட்டாளர் அனுகுதல் மற்றும் அடையான முகாமைத்துவ முறைமை தொழில் தரத்தை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) நெறிப்படுத்தல் 5.2.3 | ‘‘தேவயானதை வைத்திருத்தல்’’ அடிப்படையில் மாத்தரமே சலுகை பெற்ற பயன்பாட்டாளர் நுழைவு வழங்கப்படும். மேலும் அத்தகைய நுழைவு வேண்டப்படும் போமு குறித்த காலப்பகுதிக்கு மாத்திரமே அதிகளவு நுழைவை வழங்கப்படும். எவ்வாறாயினும் வங்கினது இந்த கட்டப்பாட்டை அமுலாக்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ஆதலால் முக்கியமான முறைமைகளிற்கு அனுமதிக்கப்படாத | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | ‘‘தேவயானதை வைத்திருத்தல்’’ அடிப்படையில் சலுகை பெற்ற பயன்பாட்டாளர் நுழைவுக்கு நடவடிகக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது அதிகளவ நுழைவை ஏற்படுத்தும் ஆபத்தை அதிகரிக்கும். இது செய்றபாட்டு பாதுகாப்பு மற்றும் தரவு ஒஙகணைப்பு சிக்கலை ஏற்பட வழிககுக்கும் | | |
| (ஔ)நெறிப்படுத்தல் 5.2.4 | அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் ஆபததான தகவல் முறைமைகளிற்காக குறைந்தது காலாண்டு அடிப்படையில் பயன்பாட்டாளர் நுழைவு சலுகை மீளாய்வு நடாத்தப்பட வேண்டும் வாடிக்கையாளர் தரவு மற்றும் வாடிக்கையாளர் அல்லாதேர் இரகசிய தகவல்களிற்கு வெளிப்படும் முக்கியமான தகவல்களிற்கு துறைந்நது இரண்டு அண்டுகள் அடிப்படையில் மற்றும் ஏனைய அனைதது தகவல் முறைமைகளிற்கும் குறைந்தது ஒரு அ்டு அடிப்படையிலி மீளாய்வு செய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும், வங்கியானது 12 முககியமாக தகவல் முறைமைகளிற்கும் (பிரதான வங்கியியல் முறைமை தவிர) 09 முக்கியமற்ற தகவல் முறைமைகளழற்கும் ஆண்டு அடிப்படையில் மாத்திரமே மீளாய்வு நடாத்தியது என அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | முறையான நுழைவு கட்டுபபாட்டை உறுதிப்படுத்த வேண்டப்பட்டவாறு பயன்பாட்டாளர் நுழைவு சலுகை மீளாய்வகள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (க) நெறிப்படுததல் 5.4.1 | சகல மின்னியல் பேணப்பட்ட தரவுகளும் சமூக பாதுகாபபு உணர்திறன் அடிப்படை வகைப்படுததப்படும். பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்ட தகவல் வகைப்படுத்தல் கொள்கை பிரகாரம் | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |

| | | | |
|---|---|---|---|
| | அடையாளம் இடப்படல் வேண்டும். எவ்வாறாயினும் வங்கியானது இந்த நெறிப்படுத்தலுடன் இணங்கியிருககாததுடன் தகவல் வகைப்படுத்தல் கொள்கை இறுதியாககப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (கா)நெறிப்படுதடதல் 5.5.1 | இந்த நெறிப்படுததலில் பரந்துரைக்கப்பட்டவாறு வாடிக்கையாளர் தரவுகள் சாதாரண குறியீடுகளை பயன்படுத்தி பாதுகாக்கப்பட வேண்டும். அனுமதியளிக்கப்பட்ட வங்கி முகவர்கள், மற்றும் மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்கள் பெணபடபடுகின்ற வாடிக்கையாளர் தரவுகளிற்கு இந்த வேண்டுகை பொருந்தும் எவ்வாறாயனும் வங்கியின் குறியீட்டு முறை இன்னமும் சபை ஒருங்கிணைந்த ஆபத்து பாதுகாப்பு குழுவால் அனுமதக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |
| (கி) நெறிப்படுத்தல் 5.6.1 மற்றும் 5.6.7(iii) | சகல அனுமதயிளக்கப்பட்ட வங்கிகளும் பணம் செலுததும் இயந்திரங்களை தவிர மின்னியல் விநியோக சனல்களை வழங்கும் விசேட அனுமதி பெற்ற வங்கிகளாகும். (உதா: இணையதள வங்கிகள், நடமாடும் தொலைபேசி செயலிகள் வாடிக்கையளர் / மூன்றாம் தரப்பு ஒருங்கிணைப்பு போன்றன) இந்த வழமையான முறைமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . |

| | | | |
|---|---|---|---|
| | தேவைக்கு ஏற்ப ஒரு பாதுகாப்பு செயறபாட்டு நிலையத்தை செயற்படுத்த வேண்டும். மேலும் தரவு இழப்பு தடுப்பு (DLP) கருவியை செயற்படுத்த சகல அனுமதியளிக்கப்பட்ட வங்கிகளிற்கும் கட்டாயமாக இருந்தது. எவ்வாறாயினும் வங்கியானது பாதுகாப்பு செயற்பாட்டு நிலையத்ததை அல்லது தரவு இழப்பு பாதுகாப்பு கருவிகளை அமுலாக்கி இருக்கவிலலை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (கீ) நெறிப்படுத்தல் 5.7.1 | அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் சம்பவ அதிகரிப்பு, தீர்வு, மீட்பு மற்றும் உள்ளக வெளிப்புற பங்குதரர்களுடனான தொடர்ப என்பவற்றிகான நடைமுறைகளை விவரிக்கும் புதிய மற்றும் பணிப்பாளர் சபையால் சமபவ பொறுப்புத் திட்டததை (IRP) கொணடடிருக்க வெண்டும். சைபர் ாதுகாப்பு நிகழ்வுகள் உள்ளடங்கலாக ஆனால் அவை மடடுமல்லாது பொதுவாக காணபபட்ட தகவல் பாதுகாபபு நிகழ்வுகளை கையாள்வதற்கு நடைமுறைகளை IRP உள்ளடக்கும். எவ்வாறாயினும் சம்பவ பொறுப்புத் திட்டம் பணிப்பாளர் சபையால் இன்மும் அனுமதக்கப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கு) நெறிப்படுத்தல் 6.2.2 மற்றும் | ஒருங்கிணைந்த ஆபதது முகாமைதது குழுவின் | முகாமைத்துவக் கருத்துரைகள் | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக |

| | | | |
|---|---|---|---|
| 6.2.3 | பரிந்துரைகளில் பணிப்பானர் சபை ஒவ்வொரு முகடகியமான தகவல் முறைமைகளிறிகும் கிடைத்த முறைமைகளை தாபிக்கும். அதேபோல முககியமான தகவல் முறைமைகளில் கிடைக்கும் இலக்ககளை அடைவதை கண்காணித்து பணிப்பாளர் சபைக்கு தெரிவிப்பதை BIRMC உறுதி செய்யும். எவ்வாறாயினும் BIRMC ஆனது முறைமையில் கிடைத்த அடைதலை கண்காணித்து அறிக்கையிட்ப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பெறப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கூ) நெறிப்படுததல் 7 | அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் தகவல் பாதுகாப்பு, தொழில்நுட்ப, ஆபத்து முகாமைததுவம் மற்றும் உள்ளக கணக்காய்வு செயறபாடுகள் என்பவற்றின் செயற்பாடுகளில் பொருத்தமான கருதிகளுடன் குறைந்த பட்ச எண்ணிக்கையான ஊழியர்களை ஈடுபடுத்துவதை உறுதப்படுத்த வேண்டும் இதன்படி பிராந்தி அபிவிரததி வங்கிகள் முகாதைத்துவ மட்டத்தில் மூ8 தகுதியுடைய உததியோகத்தர்களை கொண்டிருகக வேண்டுமம் எவவாறாயினும் வங்கியில் 01 தகுதியுடைய உத்தியோகத்தர் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நெறிப்படுததல் பிரகாரம் உரிய செயறபாடுகளில் தகுதியுடைய உத்தியோகத்தரின் வேண்டப்பட்ட குறைந்தபட்ச எண்ணிக்கையை ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கெ) நெறிப்படுததல் 8 | அனுமதியளிக்கப்பட்ட வங்கி சர்வதேச தரப்படுத்தல் முறைமையின் கட்டாய ISO தரச் சான்றிதழை செயற்டுத்த வேண்டும் அததுடன் கீழே குறிப்பிடப்பட்ட சான்றதழ் அல்லது உத்தரவாதத்தை பெறப்பட வேண்டும்.<br>• ISO/IEC 27001 இன் கடைசியான பதிப்பு<br>• ISO/IEC 27035 இன் கடைசியான பதிப்பு<br>• ISO/IEC 22301 இன் கடைசியான பதிப்பு<br>• ISO/IEC 20000 இன் கடைசியான பதிப்பு<br><br>எவ்வாறாயினும் வங்கியானது இந்த நியமங்கள் எதனையும் ஆமலாக்கியிருக்கவில்லை அத்துடன் சான்றிதழை பெறவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | வங்கியின் தகவல் பாதுகாப்பு மற்றும் செற்படுடு மீள்தன்மையை வலுப்படுத்த கட்டாய ISO தரத்தை அமுலாக்கவும் சான்றிதழை பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (கே) நெறிப்படுத்தல் 9.9.3 | அனுமதியளிக்கப்பட்ட வங்கியின் வாடிக்கையாளர்களிற்கு தரவுகளை வெளியிடும் தகவல் மையம் மூன்றாம் தரப்பு செவை வழங்குநரால் நிர்வகிக்கப்படும் அல்லது சொந்தமாக தகவல் உட்கட்டமைப்பை பயன்படுத்தும் போது புதிய அல்லது ஏற்கனவே உள்ள வாடிககையாளருடன் புதிய வியாபர உறவை தொடங்குவதற்கு முனனர் வாடிக்கையாளர் தரவை மூன்றாம் தரப்பு வழங்குநருக்கு வெளியிடுவதற்கு வெளிக்கடையான வாடிககையாளர் | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | நெறிப்படுத்தலுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.<br>. |

ஒப்புதல் பெறப்பட வேண்டும். மேலும் வாடிக்கையாளர் வெளியிடும் எந்தவொரு தகவலும் ஏற்கனவே தகவல் முறைமையை பயன்படுத்தி மூன்றாம் தரப்பு சேவை வழங்குநரால் நிர்வகிக்கப்படும் அல்லது சொந்தமான தகவல் உட்கட்டமைப்பு முறைமையை பயன்படுத்தியோ அனுமதி பெறற வங்கி அத்தகைய தகவல் முறைமைகளில் தரவு சேமிக்க அல்லது செயற்படுத்தப்பட்ட சகல வாடிக்கையாளர்களிற்கு அத்தகைய ஏற்பாட்டை பற்றி தெரிவிக்க வேண்டும். அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள் வங்கிக்ககு சொந்தமான மற்றும் நிர்வகிக்கப்படும் தகவல் முறைமை உட்கட்டமைப்பை பயன்படுத்தும் தகவல் முறைமையில் சேமிக்கப்பட்ட அல்லது செயற்படுத்தப்பட்ட வாடிக்கையாளரின் வெளிப்படையான ஒப்புதல் பெறப்பட வேண்டும். அதடதகைய தகவல் முறைமை மூன்றாம் தரப்பு சேவை வழங்குநரால் அல்லது சொந்தமான தகல் முறைமை உட்கட்டமைப்பிற்கு மாற்றபபடும். எவ்வாறாயினும் வங்கியானது இதன்படி செயற்பட்டிருக்கவில்லை என்பது அவதானக்கபபட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | 2013 திசெம்பர் 02 ஆந் திகதிய மத்திய வங்கியால் விசேட அனுமதியளிக்கப்பட்ட வங்ககளிற்கு வழங்கப்பட்ட நெறிப்படுத்தல், தீர்மானங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் | | | |
| | அ) பிரிவு 3(1)(iii) | பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை 7 பேருக்கு குறையாமலும் 13 பேருக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபை 6 உறுப்பினர்களை மாத்திரம் கொண்டுள்ளது. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | அந்த பிரமாணங்களுடக் இணங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| | ஆ) பிரிவு 3(2)(iv) | பணிப்பாளர் சபை குறைந்தது மூன்று சுயாதீன நிறைறேற்று உறுப்பினர்கள் அல்லது மொத்த சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி எது அதிகமோ அது இருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டிற்கான பொது கருவூலத்திலிரந்து பணிப்பாளர் சபை 2024 நவம்பர் 08 வரை நியமிக்கப்படவில்லை (போது கருவூலம் முன்னைய உறுப்பினர் 2023 செப்தெம்பர் 27 இல் தேர்தெடத்துதார்) மற்றும் வங்கியின் ஒவ்வொரு பங்குதாரர்களிடமிருந்து மூன்று சுதந்திர நிறைவேற்றல்லாத பிப்பாளர்கள் 2024 இன் 4 ஆவது காலாண்டில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | அந்த பிரமாணங்களுடக் இணங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| | இ) பிரிவு 3(1)(iii) | சபையானது ஒழுங்காக கூட்டப்படும். மேலும் | முகாமைத்துவக் கருத்துரைகள் | அந்த பிரமாணங்களுடக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சபை ஒரு வருடத்திற்கு குறைந்தது பன்னிரன் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2024 செப்தெம்பர் 10 வரை 15 கூட்டங்கள் நடைபெற்றன. அதன் பின்னர் கோரம் இல்லாமல் கூட்டங்கள் எதுவும் கூட்டப்பவில்லை. இதன் விளைவால் சபையின் மேற்பார்வை இல்லாமல் கணிசமான இடைவெளி ஏற்பட்டது. இது வருடத்திற்கு குறைந்தது 12 கூட்டங்களை மாத இடைவெளியில் நடாத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகையை மீறியது. | பெறப்படவில்லை. | இணங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| ஈ) | பிரிவு 3(6)(v)(உ) | ஒருங்கிணைந்த ஆபத்து முகாதைத்து குழு மேமபடுத்திய வியாபார தொடர்ச்சி திட்டங்கள் உட்பட ஆபத்து முகாமைத்துவத்தின் அனைத்து அம்சங்களையும் மதிப்பிடுவதற்கு குழு குறைந்த பட்சம் காலாண்டுக்கு ஒரு தவை கூட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டில் குழுவானது மூன்று தடவைகள் மாத்திரம் கூடியிருந்ததுடன் நான்காவது காலாண்டில் எந்தவொரு கூட்டங்களும் கூட்டப்படவில்லை. | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | அந்த பிரமாணங்களுடக் இணங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| உ) | பிரிவு 3(6)(v)(எ) | ஒருங்கிணைந்த ஆபத்து முகாதைத்து குழு ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு வாரத்திற்குள் சபையின் கருத்தக்கள் ஒப்புதல் ∴ குறிப்பிடத்தக்க வழிகாட்டல்களை பெறுவதற்காக ஒரு | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை | அந்த பிரமாணங்களுடக் இணங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆபத்து மதிப்பீட்டு அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் வங்கியின் முக்கிய ஆபத்து குறிக்காட்டிகள் குறித்த அறிக்கை மாாந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அடுத்த சபை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். | | |
| ஊ) | பிரிவு 3(1)(i)(ஓ) | அரசுடமையாக்கப்பட்ட அமைப்புகளின் சொந்த பணிப்பாளர் சபை நடைமுறைகளின் செயற்பாடு கால ரீதியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். அதில் அடங்கும்பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர்களை தெிவது பரிந்துரைப்பது மற்றும் தெரிவு செய்வது.<br><br>நலனாளிகளின் மேதல்களை நிர்வகித்தல் மற்றும்<br><br>தேவைபடும் இடங்ளில் பலவீனங்களை தீர்மானித்தல் மற்றும் மாற்றங்களை செயற்படுத்தல் எவ்வாறாயினும், ஒன்பது பணிப்பாளர் சபை உறுப்பினர்களில் ஐந்து பேர் மட்டுமே 2024 ஆம் ஆண்டின் போது அவர்களுடைய சுய மதிப்பீட்டு படிவம் சமர்ப்பித்திருப்பது. அவதானிக்கப்பட்டது. முழுமையற்ற சமர்ப்பிப்புகள் மோசமான விரவான சுய மதிப்பீடுகள் மற்றும் நிர்வாக நடைமுறைகளில் கவலைப்படாத பலவீனங்களை பாதிக்கலாம் இது தீர்மானம் எடுத்தல் | முகாமைத்துவக் கருத்துரைகள் பெறப்படவில்லை. | அந்த பிரமாணங்களுடக் இணங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் பொறுப்புக் கூறலைப் பாதிக்கும். | | |
| 3. | <u>இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கொவை - பகுதி II</u> | | | |
| அ) | பிரிவு 10:1 மற்றும் 10:2 | ஒரு குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்ட நபர் மருத்தவ அதிகாரியின கீழ் பரிசோதகைக்கு பரிந்துரைக்கப்பட வேண்டியதுடன் படிவம் பொது 169 நிறுவனத்தின் தலைவருக்கு ஆனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் கணக்காய்வு மெய்மையாய்விற்காக தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று உதியொகத்தரின் ஊழியரின் கோவையில் 3 ஊழியர்களின் (கோவை இல. 0557, 2890 மற்றும் 3272) மருத்துவ படிவம் கிடைக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | இரண்டு உத்தியோக த்தர்களிற்கான மருத்துவ படிவங்கள் (தனிப்பட்ட கோவை இல. 0557 மற்றும் 3272) அவர்களது தனிப்பட்ட கொவையில் உள்ளன. தனிப்பட்ட கோவை இல. 2890 உடன் தொடர்புடைய அதிகாரி ஏற்கனவே ஓய்வு பெற்றுள்ளால் மேலும் முன்வக்கப்பட்ட மருத்தவ படிவம் பொது 169 தற்பொது வங்கியின் மருத்தவ பரிசோதகைளிற்கு பன்படுத்தப்படுகின்றது. | அந்த பிரமாணங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| ஆ) | அத்தியாயம்-XLVIII இன் திருத்திய உப பிரிவு 22:1:1 | ஒரு அதிகாரியின் தவறான நடத்தைக்கு எதிராக வழங்கப்பட்ட குற்றப் பத்திரிகை அடிப்படையில் நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணை தொடங்கியதிலிருந்து ஆறு மாதங்களிற்குள் முடிவுறுத்தப்பட வேண்டும். அதே வேண்டுகைவ ங்கியின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் 25.8 ஆம் பிரிவின் பிரகாரம் மீளவலியுறுத்தப்பட்டது. இது 180 நாட்கள் கால எல்லையை குறிக்கின்றது. எவ்வாறாயனும், மொத்தம் 82 ஒழுக்காற்று | முகாமைதது கருத்துரைகள் பெறப்படவில்லை. | அந்த பிரமாணங்களுடன் இணங்குவதை உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வழக்குகளில் 38 வழக்குகள் 024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு காணப்படாது இருந்தது என அவதானிக்கப்பட்டது. உதவி பொது முகாமையாளரின் விசாரணை 2025 மே 15 ஆந் திகதிய கடிதத்தன் பிரகாரம் தீர்வு காணப்படாத 15 ஒழுக்காற்று வழக்குகள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையழல் இருந்தது. 07 ஒழுககாற்று வழக்குகள் ஐந்து ஆண்முகளிற்கு மேலாக நிலுவையில் இருப்பதும் அவதானிக்கப்பட்டது. மொத்த நிதி இழுப்பகள் ரூபா 67,617,084 ஆகும். | | |
| 4 | <u>பொது நிர்வாக சுற்றறிகை</u><br>2019 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 30/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை, அத்தியாயம் இன் XLVIII திருத்திய உப பிரிவு sub section 13:2 (தாபன விதிக்கோவையின் பகுதி II ) | ஒரு தவறான நட்டத்தை குறித்த ஆரம்ப விசாரணைக்கு கட்டளையிடும் அதிகாரி அத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்படும் அதேநேரத்தில் ஆரம்ப விசாரணை அதிகாரி அல்லது அதிகாரகள் குழுவிற்கு இரண்டு மாத காலத்திற்குள் அத்தகைய ஆரம்ப விசாரணையை முவவுறுத்த கண்டிப்பாக உத்தரவிட வெண்டும். எவ்வாறாயினும் வங்கியின் ஒழுக்காற்று சட்டத்தின் பிரகாரம் ஆரம்ப விசாரணையை முடிக்க குறிப்பிட்ட கால அவகாசம் குறிப்பிடப்படாததுடன் பிரிவு 14.5 இல் ஆரம்ப விசாரணை காலம் :நியாயமான காலத்தற்குள்’’ என வங்கி நிர்ணயித்துள்ளது.<br><br>2025 மே 15 இல் | முகாமைத்துவ கருத்துரைகள் பெறப்படவில்லை. | ஆரம்ப வசாரணைகள் பூரத்தியாக்குவதற் காக தெளிவான கால எல்லை குறிபபிடல் மற்றும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் சகல விசாரணைகளும் நடாத்தப்பட்டன என உறுதிப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வங்கியின் உதவி பொது முகாமையாளர் - விசாரணைகள் வழங்கிய தகவல்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 82 சந்தர்ப்பங்கிளல் விதி மீறல்கள் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் சம்பந்தப்பட்ட விதி முறைகள் பிரகாரம் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது | | |

5 <u>வங்கியின் செயற்பாட்டுக் கைநூல்</u>

i. 2024 ஆம் ஆண்டுவரை வங்கியினுடைய உள்ளக கணக்காய்வு பிரிவு வழங்கிய 40 உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு அடிப்படையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | பிரிவு 2.2.8 | ஒரே சேமிப்பு கணக்கின் குறியீட்டின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட சேமிப்பு கணக்குகளை பேணுகின்ற ஊழியர்களை தடை செய்யப்பட்டது. சில கிளைகள இந்த வெண்டுகையை பின்பற்றவில்லையென அவதானிக்கப்பட்டது. உதா: கொலண்ணாவ, வவுனியா, கஹவத்த, கலவான, குருநாகல் மற்றும் மாவனல்ல கிளைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் பெறப்படவில்லை. | செயற்பாட்டு கைநூலின் கீழ் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ஆ) | பிரிவு 2.3.1 | ஆணைகள், KYS படிவங்கள் அல்லது அடையாள அட்டை சான்றிதழ் போன்ற சேமிப்பு கணக்குகள் திறப்பதற்காக வேண்டப்பட்ட ஆவணங்கள் 18 கிளைகளில் கிடைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ கருத்துரைகள் பெறப்படவில்லை. | செயற்பாட்டு கைநூலின் கீழ் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| இ) | பிரிவு 6.3.3 | பெட்டக சாவிகள் இரட்டை கட்டுப்பாட்டின் | முகாமைத்துவ கருத்துரைகள் | செயற்பாட்டு கைநூலின் கீழ் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கீழ் பேணப்பட வேண்டியதுடன் ஒரு அதிகாரியின் கட்டுபாட்டின் கீழ் பேணப்பட வேண்டியதுடன் ஒரு அதிகாரியின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்பட்டது. எவ்வாறாயினும் 11 கிளைகள் பெட்கள சாவிகளை கவனக் குறைவாக கையாளப்படல் மற்றும் சரியான பதிவுகள் பேணப்படாமை ஏன்பன அவதானிக்கப்பட்டது. | பெறப்படவில்லை. | வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| ஈ) | பிரிவு 6.8 | கிளை முகாமையாளர் அல்லது இன்னொரு நிறைவேற்று உத்தியோகத்தரால் நாளாந்த அடிப்படையில் சுய கணக்காய்வு நடத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் 13 கிளைகள் வேண்டப்பட்டவாறு நாளாந்த சுய கணகக்காய்வை நடாத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ கருத்துரைகள் பெறப்படவில்லை. | செயற்பாட்டு கைநூலின் கீழ் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| ii. | பிரிவு 2.2.10 | கணக்கு வைத்திருப்பவர் இறப்பு உறுதி செய்யப்பட்டவுடன் அனுமதிக்கப்படாத கொடுக்கல் வாங்கலை தடுப்பதற்கு அவர் / அவள் பெயரில் உள்ள அனைத்துக் கணக்ககளையும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், சில கிளைகள் இந்த வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது உத: இறந்த வாடிக்கையாளர் இருக்கின்ற பிலியந்தலை கிளையில் | தற்போது சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | செயற்பாட்டு கைநூலின் கீழ் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 5 கணக்குகள் மற்றும் வரக்காப்பொல கிளையில் 12 கணக்குள் கணக்காய்வு திகதியில் உள்ளவாறு செயற்படு நிலையில் இருந்தது. | | |
| iii. | பிரிவு 2.6.7 | குறிப்பிடப்பட்ட நமைுறைகளின் பிரகாரம், செயற்பாடற்ற கணக்குகள் செயற்பத்தல் பதிவேடுஅகுறித்த படிவததில் பேணப்பட வேண்டியதுடன் ஏமதாவது செயற்பாடற்ற கணக்குகளின் செயற்படுத்தலிற்கு முன்னர் தரம் ஏ மற்றும் பீ அதிகாரிகள் இருவரும் அனுமதியளித்து பதிவேட்டில் கையொப்பமிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், காணககாயவு மாதிரி செவ்வையன் போது தரம ஏ மற்றும் பீ பகுதி அதிகாரிகளின் கையொபபற்கள் செயற்பாடற்ற கணக்குகள் செயற்படுத்தம் பதிவேட்டில் இல்லை என அவதானிக்கப்படடது. உதா: பிலியந்தலை மற்றும் மாவரமண்டி கிளைகள் | தற்போது சரியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | செயற்பாட்டு கைநூலின் கீழ் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| iv. | பிரிவு 2.6.8 | வாடிக்கையாளரின் நேரடி வேண்டுகை இல்லாமல் கடன் தவைைப்பணம் அறவிடுதல் அல்லது தவறான உள்ளீடுகளை சரிசெய்தல் போன்ற நொக்கங்களிற்காக ஒறு கிளை செயற்பாடற்ற கணக்கை செயற்படுத்த விரும்பினால்படிவம் 2094 ஐ முறையாக பூர்த்தி | தற்போது இது திருத்தப்பட்டது | செயற்பாட்டு கைநூலின் கீழ் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்து தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டியதுடன் தற்காலிக செயற்படுத்தலிற்காக பிராந்திய பொது முகாமையாளரால் (RGM) பரிந்துரையுடன் சமர்ப்பிக்க வெண்டும். எவ்வாறாயினும் சில கிளைகள் இந்த வேண்டுகையை பின்பற்றவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுடன் இணங்கவில்லை என்பகை குறிக்கின்றதுடன் அனுமதிக்கப்படாத அல்லது முறையற்ற செயல்படுத்தல்களின் ஆபத்தை அதிகரிக்கும். உதா: பிலியந்தலை கிளையில் 2 செயற்பாடற்ற கணக்குகள் மற்றும் மாவரமண்டி கிளையில் 4 செயற்பாடற்ற கணக்குகள் | | |
| v. | பிரிவு 3.6 | செயற்பாட்டு நடைமுறையில் வேண்டப்பட்டவாறு காசாளர் முன்னரே பதிவுசெய்யப்பட்ட பெட்டக பதிவேட்டில் கொடுக்கல் வாங்கலை பதியாமல் முன்னரே பதிவுசெய்யப்பட்ட பெட்டகத்திற்கு பணத்தை மாற்றியது அவதானிக்கப்பட்டது.<br><br>உதா: பணந்துறை கிளை | செயற்பாட்டு கைநூலை பின்பற்றவதற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.. | செயற்பாட்டு கைநூலின் கீழ் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| vi. | பிரிவு 3.8 | கணனி முறைமையில் பதவுசெய்ப்படாமல் காசாளர்களிற்கு இடையில் காசுப் பரிமாற்றம் செய்யப்பட்டது. | வழங்கப்பட்ட அறிவுத்தல்கள் மற்றும் முறையான நடைமுறைகளை பின்பற்றவதற்கு ஆலோசனை | செயற்பாட்டு கைநூலின் கீழ் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்களுடன் இணங்கியொழுக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
